412

கண்ணன்

# தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

12 JUL 1932

PUBLISHED BY

**G. V. K. SWAMY & Co.,**

**Educational Publishers,**

**KUMBAKONAM.**

1932

[விலை அணா 3.

TB
031,6N2
N32
149661

## ராசிகள் 12

| | |
|---|---|
| சித்திரை—மேஷம் | ஐப்பசி—துலாம் |
| வைகாசி—ரிஷபம் | கார்த்திகை—விருச்சிகம் |
| ஆனி—மிதுனம் | மார்கழி—தனுசு |
| ஆடி—கடகம் | தை—மகரம் |
| ஆவணி—ஸிம்மம் | மாசி—கும்பம் |
| புரட்டாசி—கன்னி | பங்குனி—மீனம் |

## நக்ஷத்திரங்கள் 27

| | | |
|---|---|---|
| அஸ்வனி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகிணி | ஹஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புணர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

உ

"என்றும் கண்ணன் அடியிணை யிறைஞ்சி
ஒன்றும் நலன் பெற்றுய்வோம் யாமே"

## கண்ணன்

# தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்.

12 JUL 1932
MADRAS

PUBLISHED BY
G. V. K. SWAMY & Co.,
**Educational Publishers,**
**KUMBAKONAM.**

காபிரைட்] 1932 [விலை அணா 3.

# முகவுரை.

ஆரம்பக் கல்விச் சாலைகளில் சிறிய மாணவர்களுக்குத் தமிழ்ப் பாஷையை நல்ல முறையில் கற்பிப்பது இன்றியமையாதது ஆகும். தமிழ்ப் பாஷையில் அவர்களுக்கு அறிவு உண்டாவதற்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வாசகப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த வாசக வரிசையில் இது இரண்டாவது புத்தகமாகும்.

இப் புத்தகத்தில் சுகாதாரம், இயற்கைத் தோற்றங்கள் சம்பந்தமான பல பாடங்களும், சிறிய கதைகளும், சம்பாஷணைகளும் சுலபமான நடையில் எழுதப்பட்டுள்ளன. கூடுமான வரையில் ஒவ்வொரு பாடத்திற்கும் உருவப்படங்கள் தயாரித்து 36 படங்கள் சரியான இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் உதவியைக் கொண்டு ஆசிரியன்மார்கள் குழந்தைகளுடன் ஒவ்வொரு பாடத்திலும் அடங்கியுள்ள விஷயங்களைப் பற்றி முதலில் சம்பாஷித்தல் வேண்டும். பின்பு ஒவ்வொரு பாடத்தையும் பிள்ளைகளை படிக்கச் செய்ய வேண்டும். இக்காலத்தில் மாணவர்கள் சரியான முறையில் படிக்கத் தெரியாமலிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். ஆகையால் ஆசிரியன்மார்கள் சரியானபடி வாசிக்கும் விதத்தை சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் கற்பிக்கவேண்டியது அவசியமாகின்றது. கடினமான பதங்கள் எப்பாடத்திலாவது இருப்பின் அவைகளைக் கரும்பலகையில் எழுதி தாம் அவைகளைப் படித்துக் காட்டியும், சில மாணவர்களைக் கொண்டு

வாசிக்கச் சொல்லியும் கற்பிக்கவேண்டும் ; அவைகளின் அர்த் தங்களை வர்ணனையினலோ அல்லது படங்களைக் கொண்டோ கற்பித்தல் வேண்டும். பிறகு கற்பித்த விஷயங்களைப் பற்றிச் சில கேள்விகளால் மாணவர்களின் அறிவைச் சோதிக்கலாம். ஒவ்வொரு பாடத்தையும் பார்த்து எழுதும்படிக்கும், சொல்லி எழுதும்படிக்கும் அப்பியாசங்கள் கொடுக்கலாம். கற்பது கொஞ்சமாயிருப்பினும் அதைக் குற்றமறக் கற்றுக்கொள்வதே அவசியம். ஆனதுபற்றி எலிமெண்டரி பாடசாலைகளில் எவ் வளவுக் கவ்வளவு எழுதுவதிலும், படிப்பதிலும் அப்பியா சங்கள் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு மாணவர்களுக்குத் தமிழ்ப் பாஷையில் அறிவு வளர்ச்சி உண்டாகும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. இலக்கண விஷ யங்களை எலிமெண்டரி பாடசாலைகளில் விதிகளைக் கொண்டு கற்பிப்பது பிசகாயினும், கூடியவரையில் இலக்கணப் பிழை யில்லாமல் சிறுவர்கள் தமிழ்ப் பாஷையைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் திறமை உண்டாகும்படி கற்பிக்கவேண்டியது ஆசிரியர்களின் முதற் கடமையாகும்.

இவ் வாசக புத்தகங்கள் மாணவர்களுக்குத் தமிழ்ப் பாஷை யில் அறிவைப் புகட்ட ஒரு வகையில் உதவக்கூடும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளனவாதலால் ஆசிரியன்மார் களும், கல்வி இலாகா அதிகாரிகளும் அதிக ஆதரவு அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். இதிலுள்ள குறைகளை உபாத்தியாயர்கள் எங்களுக்குத் தெரிவிப்பார்களா யின் கூடிய சீக்கிரத்தில் அவைகளை நீக்குவதற்கு முயல்வோம்.

THE PUBLISHERS.

# பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கண்ணன் ... | 7 |
| 2. | நமது சக்கரவர்த்தி ... .... | 8 |
| 3. | ரோஜா ... ... | 9 |
| 4. | மயில் ... ... | 10 |
| 5. | திசைகள் ... ... | 11 |
| 6. | கழுதை ... ... | 12 |
| 7. | நித்திய கருமம் ... ... | 13 |
| 8. | தொழிலாளிகள் ... ... | 14 |
| 9. | முயல் ... ... | 17 |
| 10. | ஆலமரம் ... ... | 19 |
| 11. | கோழி ... .... | 21 |
| 12. | வீடு (முதல் பாகம்) ... ... | 23 |
| 13. | வீடு (இரண்டாம் பாகம்) ... ... | 25 |
| 14. | பூனை ... ... | 27 |
| 15. | கர்வம் ஆகாது ... ... | 29 |
| 16. | ஷி பாட்டு ... ... | 31 |
| 17. | நாய் .... ... | 32 |
| 18. | நன்றியுள்ள நாயின் கதை .... ... | 34 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 19. | சூரியன் | 36 |
| 20. | பசு | 38 |
| 21. | தென்னாலிராமன் | 40 |
| 22. | தென்னைமரம் | 43 |
| 23. | குரங்கும் குருவிகளும் | 45 |
| 24. | சந்திரன் | 47 |
| 25. | பேராசை | 49 |
| 26. | வாழை | 51 |
| 27. | ஒற்றுமை | 53 |
| 28. | கிராம அதிகாரி | 55 |
| 29. | தந்திரமுள்ள காக்கை | 57 |
| 30. | சம்பாஷணை | 59 |
| 31. | நீதி மொழிகள் | 61 |
| | ஆத்தி சூடி | 62 |
| | உலக நீதி | 63 |

கண்ணன்

# தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்.



## 1. கண்ணன்

1. இது கண்ணன் படம்.
2. இவர் தேவகியின் குமாரர்.
3. இவருடைய தந்தை வசுதேவர்.
4. இவர் ஆவணி மாதம் பிறந்தார்.
5. இவர் கோகுலத்தில் வளர்ந்தார்.
6. இவர் பிறந்தநாள் நமக்கு ஒரு பண்டிகை.
7. அதுவே கோகுலாஷ்டமி.
8. கண்ணன் பல லீலைகள் செய்தார்.
9. கடவுளை நாள்தோறும் கருத்தாய் வணங்கு.



## 2. நமது சக்கரவர்த்தி

1. இந்தப் படத்தைப் பார்.
2. இவரே நமது சக்கரவர்த்தி.
3. இவர் பெயர் ஐந்தாம் ஜார்ஜ்.
4. இவர் பல அரசர்களுக்கு அரசர்.
5. அதனுல் இவருக்குச் சக்கரவர்த்தி என்று பெயர்.
6. இவர் லண்டன் நகரத்தில் வசிக்கிறுர்.
7. இவர் எட்வர்டு சக்கரவர்த்தியின் பிள்ளை.
8. இவர் நமக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறுர்.
10. இவரைக் கடவுள் காப்பாராக.



## 3. ரோஜா

1. இந்தச் செடியைப் பார்.
2. இது அடர்த்தியாக இருக்கிறது.
3. இது ஒரு ரோஜாச் செடி.
4. செடியில் முள் அடர்ந்து இருக்கிறது.
5. ரோஜாவில் பல வகைகள் உண்டு.
6. ரோஜா புஷ்பம் மிகவும் அழகானது.
7. அது மிகுந்த வாசனை உள்ளது.
8. அதிலிருந்து பன்னீரும் அத்தரும் செய்ய லாம்.
9. பூவினால் லேகியமும் செய்வதுண்டு.
10. மலரினால் அழகான மாலைகள் கட்டலாம்.



## 4. மயில்

1. இது ஒரு மயில் படம்.
2. மயில் காட்டில் வசிக்கும்.
3. அதை வீட்டிலும் வளர்ப்பது உண்டு.
4. மயிலின் வால் நீளமானது.
5. அதற்குத் தோகை என்று பெயர்.
6. ஆண் மயிலுக்குத் தோகை உண்டு.
7. தோகையில் அழகான கண்களைப் பார்.
8. அது பல நிறம் பொருந்தி இருக்கிறது.
9. அதனால் அது மிகவும் அழகாக இருக்கிறது.
10. மயில் மேகத்தைக் கண்டால் ஆடும்.
11. பாம்புக்குப் பகை மயில்.
12. மயில் முருகனுடைய வாஹனம்.



## 5. திசைகள்

1. என் எதிரே தோன்றுவது சூரியன்.
2. சூரியன் இப்போதுதான் உதிக்கிறது.
3. அந்தப் பக்கத்திற்குக் கிழக்கு என்று பெயர்.
4. சூரியன் என் பின் பக்கம் மறையும்.
5. அது மறையும் பக்கம் மேற்கு.
6. எனது வலதுகைப் பக்கம் தெற்கு.
7. என் இடதுகைப் பக்கம் வடக்கு.
8. திசைகள் நான்கு:—
9. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு.




## 6. கழுதை

1. இது கழுதையின் படம்.
2. கழுதை பார்வைக்கு விகாரமாய் இருக்கும்.
3. அது சாம்பல் நிறம் உள்ளது.
4. அதை வண்ணான் வீட்டில் காணலாம்.
5. அது உதைக்கும் குணம் உள்ளது.
6. அதன் காலில் பிளவுபடாத குளம்பு உண்டு.
7. அது புல்லையும் இலைகளையும் தின்னும்.
8. அது சுத்தமான தண்ணீரையே குடிக்கும்.
9. அதற்குக் கொம்பு இல்லை.
10. கழுதை மிகவும் பொறுமையான பிராணி.
11. அது பெருத்த குரல் எடுத்துக் கத்தும்.
12. அதன் பால் மருந்துக்கு உதவும்.

# 7. நித்திய கருமம்

1. அதிகாலையில் எழுந்திரு.
2. உடனே சுவாமியைக் கும்பிடு.
3. ஜனங்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் மல ஜலம் கழி.
4. பற்களை நன்ருய்ச் சுத்தம் செய்.
5. தினமும் காலையில் ஸ்நானம் செய்.
6. வீட்டில் தொந்தரவு செய்யாதே.
7. பள்ளிக்கூடம் போகுமுன் பாடங்களைச் செவ்வையாக வாசி.
8. சாப்பிட்டபின் சரியான வேளையில் பள்ளிக்கூடம் போ.
9. பாடம் படிக்கும்போது கவனமாய்ப் படி.
10. மாலையில் நன்ருய் வியர்க்க விளையாடு.
11. இரவில் தினமும் பாடம் படி.
12. சாப்பிட்ட பிறகு கொஞ்ச நேரம் சென்று நித்திரை செய்.

# 8. தொழிலாளிகள்.

இந்தப்படத்தில் ஒருவன் பெட்டி செய்கிருன்.



அவன் நமக்கு வேண்டிய மரச் சாமான்களைச் செய்து கொடுப்பான். ரம்பம், உளி, கொட்டாப்புளி, இழைப்புளி முதலியவை அவனுடைய ஆயுதங்கள். மரவேலை செய்பவன் தச்சன்.

இந்தப் படத்தைப் பார். ஒருவன் இரும்பை நன்ருய் நெருப்பில் காய்ச்சி அடிக்கிருன். அவன் நமக்கு அரிவாள், மண்வெட்டி, சங்கிலி, பூட்டு, தாழ்ப்பாள் முதலிய இரும்புச் சாமான்களைச் செய்து கொடுப்பான். இரும்பு வேலை செய்பவன் கருமான். இவனைக் கொல்லன் என்றும் சொல்லுவதுண்டு.



இந்த மனிதன் ஏர் உழுகிறான். இவன் வயலை



நன்றாக உழுது, பயிர் செய்வான். பயிர் அதிகப் பலனைக் கொடுக்கும். அதனால் ஜனங்கள் சுகமாய் வாழலாம். பயிர் செய்பவன் உழவன். பயிரிடும் தொழில் மிகவும் மேலானது. பருவத்தில் பயிர் செய்.

இப்படத்தில் ஒருவன் வீடு கட்டுவதைப் பார்.



அவன் செங்கல்லும், சுண்ணும்பும் கொண்டு இந்த வீட்டைக் கட்டுகிறான். கரண்டி, மட்டப் பலகை, தூக்குக்குண்டு முதலியவை அவனுடைய ஆயுதங்கள். வீடு கட்டுகிறவன் கொத்தன். அவனைக் கொல்லத்துக்காரன் என்றும் சொல்லுவார்கள்.



இந்தப் படத்தில் ஒருவன் பானை செய்கிறான். அவன் மண்ணைப் பிசைந்து சக்கரத்தில் வைத்துச் சுற்றி பாண்டங்களைச் செய்வான். பிறகு அவன் அவைகளைக் காயவைத்து, சூளையில் வைத்துச் சுடுவான். மண்பாண்டம் செய்பவன் குயவன்.



இந்தப் படத்தைப் பார். இதில் ஒருவன் துணி நெய்கிறான். அவன் நூலை நூற்று புடவை நெய்கிறான்; நமக்கு வேண்டிய நல்ல ஆடைகளைச் செய்து கொடுப்பான். துணி நெய்பவன் சேணியன்.



இந்தப்படத்தில்ஒருவன் கழுதையை ஓட்டிக் கொண்டு போகிறான். அதன் மேல் மூட்டையைப் பார். அது அழுக்குத் துணிகள் உள்ள ஒரு மூட்டை. அவற்றை அவன் நன்றாய் வெளுத்து சுத்தம் செய்வான். துணி வெளுப்பவன் வண்ணான்.



# 9. முயல்

1. இது ஒரு முயல். முயல் காட்டில் வசிக்கும் ஒரு பிராணி. அது மிகவும் பயந்த குணம் உள்ளது. அதன் காதுகள் நீண்டு நிமிர்ந்து இருக்கின்றன. ஆகையால் அது மிகவும் சிறிய சத்தத்தைக் கேட்டாலும் பயந்து ஓடும்.

2. முயலின் முன் கால்கள் குட்டையாகவும், பின் கால்கள் சற்று நீளமாகவும் இருக்கின்றன. அதனால் அது தத்தித் தத்தி வேகமாக ஓடும். அதன் வால் மிகவும் குட்டையானது. அதன் கண்கள் சிறியவை.

3. முயல் பூமியில் வளை தோண்டிக்கொண்டு அதில் வசிக்கும். அது குட்டி போடும்; தன்

குட்டிக்குப் பால் கொடுக்கும். குட்டிகள் சில நாட்கள் வரையில் கண் திறவாது.

4. காட்டில் இருக்கும் முயல் பழுப்பு நிறம் உடையது. அதன் கண்கள் கறுப்புநிறமாக இருக்கும். வீட்டில் ஒருவகையான முயலை வளர்க்கிறார்கள். அது வெண்மை நிறம் உடையது. அதன் கண்கள் சிவப்பு வர்ணமாக இருக்கும்.

5. முயல் புல்,இலை,தழை முதலியவற்றைத் தின்னும். குளத்திலுள்ள தண்ணீரைக்குடிக்காது. ஆனால் புல்மேலுள்ள பனித் தண்ணீரை நக்கிக் குடிக்கும். அது ஒருவருக்கும் தீங்கு செய்யாது. சிலர் காட்டு முயலை வேட்டையாடி அதன் மாமிசத்தைத் தின்பார்கள்.



# 10. ஆலமரம்

1. மரம், செடி, கொடி, புல் பூண்டு முதலிய வற்றிற்குத் தாவரம் என்று பெயர். சில தாவரங் களுக்குக் கிளைகள் உண்டு. சிலவற்றிற்குக் கிளை கள் இல்லை.

2. கிளைகள் உள்ள மரங்களில் ஆலமர மும் ஒன்று. ஆலமரம் உஷ்ண தேசங்களில் ஓங்கி வளரும். அதன் கிளைகள் படர்ந்து நீண்டு வள ரும். அதன் கிளைகளிலிருந்து விழுதுகள் சாட்டை போல் தொங்குவதைப் பார்.

3. ஆலமரத்தின் இலை முட்டை வடிவமாக இருக்கிறது. அதன் மேல்புறம் பச்சையாகவும், அடிப்பக்கம் சற்று வெளுத்தும் இருக்கும். ஆலம் பழம் சிவப்பு நிறமானது. அது கோலியைப் போல் உருண்டையாய் இருக்கிறது. அதன் உள்ளே மிகவும் சிறிய விதைகள் நிரம்பி இருக்கும்.

4. நாம் அதன் இலையைத் தைத்து அதில் சாப்பிடலாம். ஆல விழுது பல் தேய்க்க உதவும். வெயில் காலத்தில் ஆடு மாடுகள் அதன் நிழலில் படுத்திருந்து இளைப்பாறும். வழிப் போக்கர்கள் அதன் அடியில் தங்கி சமையல் செய்து சாப்பிட்டுச் செல்வார்கள். அரசர்கள் தங்கள் சேனைகளுடன் தங்குவதற்கு வேண்டிய நிழலை அந்த மரம் கொடுக்கிறது.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி."



## 11. கோழி

1. இது ஒரு கோழி. குடியானவர்கள் கோழியை வீட்டில் வளர்க்கிறார்கள். அது அதிக உயரம் பறக்காது.

2. கோழி பார்வைக்கு அழகாக இருக்கும். அது வெண்மை, கருமை, சிவப்பு, பழுப்பு முதலிய நிறங்கள் உடையதாக இருக்கிறது.

3. பெண் கோழிக்குப் பெட்டைக் கோழி என்றும், ஆண் கோழிக்குச் சேவல் என்றும் பெயர். சேவலுக்குத் தலையில் கொண்டை உண்டு.

பெட்டைக் கோழிக்கு கொண்டை இல்லை. சேவல் பெட்டைக் கோழியைக் காட்டிலும் சற்று உயரமானது. சேவலின் வால் இறகு நீண்டு இருக்கும்.

4. கோழி இரையைக் காலால் சீத்துத் தின்னும். அதன் காலில் முன்பக்கம் மூன்று விரல்களும், பின் பக்கம் ஒரு விரலும். ஆக நான்கு விரல்கள் இருக்கின்றன. சேவலின் காலில் பின் விரலுக்கு மேலே கொம்புபோல் ஒரு உறுப்பு உண்டு. அதற்கு முள் என்று பெயர்.

5. கோழி முட்டையிட்டு, அதன்மேல் உட்கார்ந்து அடைகாக்கும். சில நாட்களுக்குப் பின் முட்டை வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும். அவை கொஞ்ச நேரத்தில் தாமே இரை பொறுக்கும். கோழி தன் குஞ்சுகளுக்கு இரையை எடுத்து வாயில் கொடுக்காது.

6. சேவல் அதிகாலையில் கூவும். குடியானவர்கள் உடனே எழுந்து வேலைக்குப் போவார்கள். கோழி, தானியம், புழு, பூச்சி முதலியவற்றைத் தின்னும். சிலர் கோழியையும் அதன் முட்டைகளையும் புசிக்கிறார்கள்.

# 12. வீடுகள் (முதல் பாகம்)

நாம் வெயிலாலும், மழையாலும், காற்ருலும் வருந்தாமல் இருப்பதற்காக வீடு கட்டிக்கொள்ளுகிறோம். வீடுகள் பலவகைப்படும்.



இது ஒரு குடிசை. இதில் மிகவும் ஏழையான ஜனங்கள் வசிக்கிறார்கள், அவர்கள் சிறு கழிகளாலும் ஓலைகளாலும் அதைக் கட்டிக் கொள்ளுகிறார்கள். குறவர்கள் இதில் வசிப்பதை நாம் பார்க்கலாம்.

இந்த வீட்டைப் பார். இது ஒரு கூறை வீடு. இதன் சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த வீட்டை வரிச்சுகளாலும், கம்புகளாலும் கட்டி அதன் மேலே கூரை போட்டிருக்கிறார்கள். சிலர் கீற்றுகளை மாத்திரம் போடுவதுண்டு. சிலர் அதன்மேல் வைக்கோலும் போடுவார்கள்.



வீடுகளில் ஓட்டு வீடும் ஒன்று. சுவரின்மேல்



மூங்கில் மரங்களை ஒழுங் காகத் தைத்து அதன் மேல் ஓடுகளைப் பரப்பு வார்கள். வெயிற் காலத் தில் இந்த வீட்டில் வெப் பம் அதிகமாகஇருக்கும். ஆதலால் சிலர் அம் மரங்களின்மேல் பலகைகளையாவது பாய்களையா வது அடித்து ஓடு போடுவார்கள்.

இங்குள்ள இந்தப் படத்தைப் பார். இதற்



குக் காரை வீடு என் றும், கெட்டி வீடு என்றும் பெயர். இதன் சுவர்களைச் சுட்ட செங்கலுடன் மண் அல்லது சுண் ணும்பு வைத்துக் கட்டுவார்கள். இதன் கூரையைப் பார். இது மற்ற வீடுகளைப் போல் இல்லை; சுவரின் மேல் கட்டை களைப் பரப்பி, செங்கலால் கட்டி இருக்கிறது. இந்த வீட்டில் திருடர் பயம் கிடையாது.

# 13. வீடுகள் (இரண்டாம் பாகம்)

ராமன்:—கந்தா, என்ன மெலிந்து இருக்கிறாய்?

கந்தன்:—ராமா, அதை ஏன் கேட்கிறாய்? நான் ஒரு [illegible]தமாய் ஜுரமாக இருந்தேன்.

ராமன்:—நான் உன்னைப் பார்த்துப் பல நாட்கள் ஆயின! நீ எங்கே இருக்கிறாய்?

கந்தன்:—ராமா, நான் என் கிராமத்தில் வயல் புரத்தில் வசிக்கிறேன்.

ராமன்:—கந்தா, சரிதான். உன் வீடு தான் உன்னுடைய வியாதிக்குக் காரணம்.

கந்தன்:—ராமா, நீ என்ன அப்படிச் சொன்னாய்? வீட்டுக்கும் வியாதிக்கும் என்ன சம்பந்தம். அதைத் தயவு செய்து சொல்ல வேண்டும்.

ராமன்:—நண்பா, உன் வீட்டைச் சுற்றிலும் தண்ணீரும், குப்பை கூளமும் இருக்கின்றன அல்லவா? அவைகளில் கொசு விருத்தியாகி உங்களைக் கடிக்கிறது. அதனால் ஜுரம் உண்டாகிறது.

கந்தன்:—ராமா, அப்படியானால் நான் என்ன செய்யவேண்டும்?

ராமன்:—நீ உன் வீட்டை மேடான இடத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.



ஆவணக்காப்பக

கந்தன்:—ராமா, அது மட்டும் போதுமா?

ராமன்:—அது மட்டும் போதாது. அதில் எதிர் எதிராக நிலைகளும், ஜன்னல்களும் வைக்க வேண்டும். ஆடு மாடுகளுக்குத் தனியான இடம் கட்ட வேண்டும். வீட்டுக்குப் பக்கத்தில் குப்பை கொட்டக் கூடாது. இப்படிச் செய்தால் உத்தமமான காற்றை உட்கொண்டு சுகமாய் வாழலாம்.

கந்தன்:—ராமா, வீட்டில் பலவிதம் உண்டு அல்லவா? அவற்றில் எதில் வசிப்பது நல்லது?

ராமன்:—நான் சொல்லிய விதிப்படி அமைந்துள்ள எந்த வீட்டிலும் வசிக்கலாம்.

கந்தன்:—நேசா, உன்னுடைய உபகாரத்தை நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன். நான் போய் வருகிறேன், வந்தனம்.



# 14 பூனை

1. பாலா, மேலே உள்ள படத்தைப் பார். அதில் ஒரு பெரிய பூனையும், மூன்று குட்டிகளும் இருக்கின்றன. குட்டிகள் அதன்முன் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

2. பூனை நம்முடைய வீடுகளில் திரியும் ஒரு ஜந்து. அதன் தலை குண்டுபோல் உருண்டையானது. அதன் கண்கள் வட்டமாக இருக்கும். பகலில் அதற்குக் கண் கூசும். அது இரவில் கண்களை நன்ராய்த் திறந்து பார்க்கும். அதற்கு முகத்தில் மீசை மயிர் உண்டு. அதன் உதவியால் பூனை இரவில் வழியைத் தெரிந்து கொள்ளும்.

3. பூனையின் நாக்குச் சொறசொறப்பானது. அதனால் அது எலும்புடன் சேர்ந்துள்ள மாமி

சத்தை நன்றாய் நக்கித் தின்னும். அதன் பாதத்தில் மெத்தை போன்ற சதைத் திண்டுகள் உண்டு. அதனால் அது நடக்கும்போது கொஞ்சங்கூட சத்தம் கேட்பதில்லை.

4. பூனையின் பாதத்தை உற்றுப்பார். அதன் நகங்கள் மிகவும் கூரானவை. அவை கொக்கி போல் வளைந்து இருக்கின்றன. பூனை தனக்கு இஷ்டமானபோது நகத்தை வெளியே நீட்டும்; மற்ற நேரத்தில் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

5. பூனை இளம் வெயிலிலும், அடுப்பண்டையிலும் படுத்திருக்கும். அது தன் உடம்பை அடிக்கடி நாக்கினால் நக்கிச் சுத்தம் செய்துகொள்ளும்.

6. பால், சோறு, நெய், மாமிசம் முதலியவற்றைப் பூனை பிரியமாய்த் தின்னும். முக்கியமாய் அது எலிகளைப் பிடித்துத் தின்னும். பூனை தன் குட்டிகளை வாயில் கௌவிக்கொண்டு போகும். அதனால் குட்டிக்கு ஒரு கெடுதியும் வராது. நாம் எலிகளைக் கொல்வதற்கு பூனையை வீடுகளில் வளர்க்கிறோம்.



## 15. கர்வம் ஆகாது

1. ஒரு ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் தென்னை மரங்கள் இருந்தன. அதன் ஓரத்தில் பச்சைப் பசேலென்று நாணல் அடர்ந்து வளர்ந் திருந்தது. அது பார்வைக்கு மிகவும் அழகாகக் காணப்பட்டது.

2. ஒரு நாள் தென்னை மரம் நாணலைப் பார்த்து, 'நீ மிகவும் அற்பன். சிறு காற்று அடித் தாலும் கூட தலை வணங்குகிறாய்; நானோ மிகவும்

பெரியவன் ; எவ்வளவு பெரிய காற்று வீசினுலும் நிமிர்ந்தே நிற்கிறேன்' என்று கர்வமாகச் சொல்லிற்று.

3. அதைக் கேட்ட நாணல் அதிக வணக்கத்துடன், 'அண்ணு ! நீர் பெரியவர்தான். ஆனுல் எப்போதும் நிமிர்ந்தே இருந்தால் கெடுதியும் உண்டு.' என்றது.

4. இப்படியாக அவை இரண்டும் பேசிக் கொண்டு இருக்கும்போது, திடீரென்று ஒரு பெரிய காற்று வீசியது. அப்போது நாணல் வளைந்து கொடுத்தது. தென்னை மரமோ அடியோடு கீழே சாய்ந்தது.

5. பிள்ளைகளே, இந்த இரண்டில் நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? நாணலைத்தான் விரும்புவீர்கள். ஏனென்றுல் காற்று அடிக்கும் போது, அது வளைந்து கொடுத்தது. அதனுல் அதற்குச் சேதம் ஏற்படவில்லை அல்லவா? அதைப்போலவே, நீங்களும் எல்லோரிடத்திலும் பணிவாக இருந்தால் நல்ல பதவியை அடையலாம்.

"தாழ்ந்து நின்றுர் வாழ்ந்து நிற்பார்."

## 16 கர்வம் ஆகாது (பாட்டு)

(பச்சைமலை பவழமலை என்ற மெட்டு)

1. ஆற்றின் இரு பக்கத்திலும்
அடர்ந்த தென்னந் தோப்பும்
காற்றி லாடும் நாணலுமே
காண்க வெகு நேர்த்தி.

2. தென்னையது நாணலையும்
தெம்புடனே நோக்கி
சின்னஞ்சிறு காற்றினுக்கும்
சிரங்குனியும் அற்பா.

3. என்று தென்னை கர்வமாக
எடுத்துரைத்த போது
என்றுமில்லாக் காற்று ஒன்று
அன்று வீசினதுவே.

4. கர்வமது கொண்ட தென்னை
கெட்டு வீழ்ந் திருக்க
கர்வமற்ற நாணலுமே
வாழ்ந் திருந்ததுகாண்.

5. ஆதலினால் சிறுவர் நீங்கள்
அகந்தை நீங்கி நாளும்
நீதமாகத் தாழ்ந்து நின்றால்
வாழ்ந்து சுகம் பெறலாம்.



## 17. நாய்

1. இது ஒரு நாயின் படம். நாம் நாயை வீட்டில் வளர்க்கிறோம். ஆகையால் அது வீட்டுப் பிராணிகளில் ஒன்று.

2. நாயில் குச்சு நாய், பட்டி நாய், வேட்டை நாய் எனப் பலவிதங்கள் உண்டு. அது குட்டி போட்டுப் பால் கொடுக்கும். அது தன்னை வளர்க்கும் எஜமானனிடத்தில் அதிகப் பிரியமாய் இருக்கும்.

3. நாயின் முகம் நீண்டு இருக்கும். சில நாய்களுக்குக் காதுகள் நிமிர்ந்தும், சிலவற்றிற்குப் படிந்தும் இருக்கும். அதன் நாக்கு சொற

சொறப்பானது. நாய் மோப்பத்தினுல் வழியைத் தெரிந்து கொள்ளும். அதன் கால்கள் மெலிந்து நீண்டு இருக்கின்றன. அதற்கு முன் காலில் ஐந்து விரல்களும், பின் காலில் நான்கு விரல்களும் இருக்கின்றன. அதன் பாதம் சொற சொறப் பானது.

4. நாய் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். நாக்கிலிருந்து சொட்டும் தண்ணீரே அதன் வியர்வை. நாய்க்குச் சந்தோஷம் உண்டானுல் வாலே ஆட்டும்; அதற்குக் கோபம் வந்தால் பல்லைக் காட்டி உறுமும்.

5. நாய் சோறு, கறி, மீன் முதலியவற்றைத் தின்னும்; உணவை மென்று தின்னுமல் அப்படியே துண்டு துண்டாய் வெட்டி விழுங்கும்; தண்ணீரை நக்கிக் குடித்து தாகத்தைத் தணித்துக் கொள்ளும்.

6. நாய் இரவில் வீட்டைக் காக்கும். அது வேட்டையாடுவதற்கும் உதவும். அது சில சமயங்களில் நம்முடைய உயிரையும் காப்பாற்றும். அது மிகவும் நன்றியுள்ள பிராணி. ஆதலால் நாம் அதை அடிக்கக்கூடாது; அதனிடத்தில் பிரியமாய் இருக்க வேண்டும்.



# 18. நன்றியுள்ள நாயின் கதை

1. ஒரு ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் பெயர் முருகேசன். அவன் நகை வியாபாரம் செய்து வந்தான். அவனிடத்தில் ஒரு நாய் இருந்தது. அதை அவன் அதிக அன்புடன் வளர்த்து வந்தான்.

2. முருகேசன் தன் தோளில் மூட்டையைப் போட்டுக் கொண்டு அயலூருக்குப் போய் வியாபாரம் செய்து வருவான். அவன் போகும்போது தன் நாயையும் அழைத்துச் செல்வது வழக்கம்.

3. ஒரு நாள் முருகேசன் திரும்பி வரும்போது மாலையிருள் வந்து விட்டது. வழியில் சில

திருடர்கள் வந்தார்கள் ; வியாபாரியைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டினார்கள்; பின்பு மூட்டையை எடுத்துக்கொண்டு போய் நடுக்காட்டில் ஓரிடத்தில் புதைத்து விட்டுப் போனார்கள்.

4. பொழுது விடிந்தது. ஒரு வழிப்போக்கன் வியாபாரியைக் கண்டு அவன்மீது இரக்கம் கொண்டான் ; கட்டை அவிழ்த்து விட்டுச் சென்றான். நாய் திருடர்கள் போன வழியைப் பார்த்துக் குறைத்துக் கொண்டே ஓடிற்று. வியாபாரியும் அதன் பின்னே சென்றான். கொஞ்சதூரம் போனதும், அது தரையைக் காலால் பிராண்டிக் குரைத்தது. முருகேசன் அங்கே போய்ப் பார்த்தான். அவன் தன் மூட்டையைக் கண்டு சந்தோஷம் கொண்டான். பின்பு அவன் தன் மூட்டையுடன் வீடு சேர்ந்தான்.

5. அவனும் அவன் குடும்பத்தாரும் அந்த நாயின் நன்றிக்கு மிகவும் மெச்சினார்கள். அது முதற் கொண்டு அவர்கள் அதை வெகு பக்ஷமாய் வளர்த்து வந்தார்கள்.



# 19. சூரியன்

1. குழந்தாய், சூரியன் தோன்றும் பக்கம் கிழக்கு என்றும், அவன் மறையும் பக்கம் மேற்கு என்றும் உனக்குத் தெரியும் அல்லவா ? அதோ ஆகாயத்தில் சூரியனைப் பார். அவன் கிழக்கே பிரகாசிக்கிருன். இந்த நேரத்திற்குக் காலை என்று பெயர்.

2. சூரியன் கொஞ்சம் கொஞ்சமாய் மேலே போய் நமது தலைக்கு நேரே வருகிருன். அந்த நேரத்திற்கு நடுப்பகல் என்று பெயர். பிறகு சிறிது

சிறிதாக இறங்கி மேற்கே போய் மறைவான். இந்த நேரம் மாலை எனப்படும்.

3. சூரியன் பிரகாசிக்கும் காலத்திற்குப் பகல் என்று பெயர். அவன் பிரகாசிக்காத காலத்திற்கு இரவு என்று பெயர்.

4. ஒரு பகலும், ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம். நான்கு வாரங்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு வருஷம்.

5. சூரியன் பகலில் வெளிச்சம் கொடுக்கிறான். அந்த வெளிச்சத்திற்கு வெயில் என்று பெயர். வெயில் மிகவும் சூடானது. ஆதலால் நீ வெயிலில் திரியாதே.



## 20. பசு

1. இது ஒரு பசு. பசு மிகவும் சாதுவான பிராணி. இந்தப் படத்தைப் பார். இதில் ஒருவன் பால் கறந்துகொண்டு இருக்கிருன்.

2. பசுவின் தலையில் இரண்டு கொம்புகள் இருக்கின்றன. அதனுல் பசு தன் பகைவரை முட்டித் தள்ளும். அதன் பருத்த உடலைத் தாங்குவதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. கால்களின் நுனியின் பிளவு பட்ட குளம்புகள் இருப்பதைப் பார்.

3. தலையில் கொம்பு உள்ள மிருகங்களுக்கு பிளவுபட்ட குளம்புகள் உண்டு. பசுவின் வால் மெலிந்து நீண்டிருக்கும். அதன் நுனியில் மயிர்க் குஞ்சம் உண்டு. அதனல் அது தன்மேல் உட்காரும் ஈ, கொசு முதலியவற்றை ஓட்டிக் கொள்ளும்.

4. பசு வெண்மை, செம்மை, கருமை முதலிய நிறங்கள் உடையது. காராம் பசு என்பது அவற்றில் ஒன்று. அதன் பால் கடவுளுக்கு அபிஷேகம் செய்யவும், நெய் விளக்குப் போடவும் விசேஷமானது.

5. ஆண் கன்றுக்குச் சேங்கன்று என்றும், பெண் கன்றுக்குக் கிடாரி என்றும் பெயர். அது போலவே மாட்டில் பெண்ணை பசு என்றும், ஆணை காளை என்றும் அழைக்கிறோம்.

6. பசு நமக்குப் பால் கொடுக்கிறது. அதன் பால் மிகவும் இனிப்பானது. பால் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது. அது குழந்தைகளுக்கு ஏற்ற உணவாகும். பாலைக் காய்ச்சி மோரை ஊற்றினால் தயிர் ஆகும். தயிரைக் கடைந்தால் மோரும், வெண்ணெயும் ஆகும். வெண்ணெயைக் காய்ச்சி நெய் செய்யலாம். பசுவின் சாணத்தால் வீட்டைச் சுத்தம் செய்யலாம். அது வயலுக்கு நல்ல உரம் ஆகும்.

7. பசு புல்லும், வைக்கோலும் தின்று தண்ணீரைக் குடிக்கும். சிலர் பருத்திக் கொட்டையை ஊரவைத்து உரலில் போட்டு ஆட்டி, அத்துடன் தவிட்டைக் கலந்து உணவாக வைக்கின்றனர். பிண்ணாக்கும் அதற்கு வைப்பது உண்டு. ஹிந்துக்கள் பசுவை தெய்வமாக வணங்குகிறார்கள்.

# 21. தென்னுலிராமன்

1. தெலுங்கு தேசத்தில் தென்னுலி என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் ராமன் என்று ஒரு பையன் இருந்தான். அதனுல் அவனுக்குத் தென்னுலிராமன் என்ற பெயர் வந்தது.



2. தென்னுலிராமன் மிகவும் புத்திசாலி; எந்தக் காரியத்தையும் தந்திரமாகச் செய்வான். அவனுடைய செய்கை எல்லோருக்கும் சிரிப்பை உண்டாக்கும்.

3. அந்த ஊரில் ராயர் என்று ஒரு பிரபு இருந்தார். அவர் சில பூனைகள் வளர்க்க எண்ணினார். ஆதலால் அவர் வேலைக்காரர்களை அழைத்தார்; ஒவ்வொருவனிடமும் ஒரு பூனைக் குட்டியும் பாலுக்காக ஒவ்வொரு பசுவும் கொடுத்தார். தென்னாலிராமனும் ஒரு பூனைக் குட்டியும், ஒரு பசுவும் வாங்கிக் கொண்டு போனான்.

4. எல்லோரும் நாள்தோறும் பூனைக் குட்டிக்குப் பாலை ஊற்றி, நன்றாக வளர்த்து வந்தார்கள். அவைகளும் நன்றாகக்கொழுத்து இருந்தன. ஆனால் தென்னாலிராமன் மாத்திரம் அப்படிசெய்யவில்லை; பாலைக் காய்ச்சி பூனைக்குச் சுடச்சுட வைத்தான். அதனால் பூனையின் வாய் வெந்து போயிற்று. அது முதல் பாலைக் கண்டால் அது ஓடிப் போய் விடும். தினமும் அவனே பாலைக் குடித்தான். பூனை மெலிந்து போயிற்று.

5. பிரபு ஒருநாள் பூனைகளைப் பார்க்க எண்ணினார்; பூனைகளைக் கொண்டு வரும்படி தமது வேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்தார். அப்படியே எல்லோரும் பூனைகளைக் கொண்டு வந்தார்கள். தென்னாலிராமனுடைய பூனை மாத்திரம் இளைத்து இருந்ததை பிரபு பார்த்தார்.

6. பிரபு தென்னலிராமனைப் பார்த்து, 'உன் பூனை ஏன் மெலிந்து இருக்கிறது?' என்று கேட்டார். அதற்கு அவன், "பிரபுவே! நான் என்ன செய்வேன்? பாலைக்கண்டால் அது ஓடி விடுகிறது." என்றான்.

7. உடனே பிரபு, கொஞ்சம் பால் கொண்டு வந்து பூனைக் குட்டிக்கு வைக்கச் சொன்னார். வேலைக்காரர்கள் அப்படியே செய்தார்கள். பாலைக் கண்டதும் பூனை ஓட்டம் பிடித்தது. அவர் பூனையைப் பிடித்து அதன் வாயைத் திறந்து பார்த்தார். உண்மையைத் தெரிந்துகொண்டு எல்லோரும் நகைத்தார்கள்.

"சூடு கண்ட பூனை அடுப்பண்டை போகாது."



## 22. தென்னை

1. இந்த மரத்தைப் பார். இதுதான் தென்னை மரம். உஷ்ண தேசத்தில் வளரும் மரங்களில் இதுவும் ஒன்று. இது கடற்கரை யோரங்களிலும், நீர்வளம் உள்ள இடங்களிலும் அதிகமாய் வளரும்.

2. தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை. அது ஓங்கி வளரும். மரத்தின் உச்சியில் சில மட்டைகள் இருக்கின்றன. மரத்தின் மேல் புறம் அநேக வடுக்கள் இருப்பதைப் பார். அந்த வடுக்களை எண்ணி மரத்தின் வயதைச் சொல்லலாம்.

3. கோடாரியால் மரத்தை வெட்டிப் பார். அதன் மேல் புறம் கடினமாகவும் உட்புறம் மெதுவாகவும் இருக்கிறது. ஆனால் மா, புளி முதலிய மரங்கள் இப்படி இல்லை.

4. தென்னை மரத்தின் உச்சியை உற்றுப் பார். மட்டைகளின் ஊடே பாளைகளும், குலை குலையாய்த் தேங்காய்களும் இருக்கின்றன. பாளை வெடித்துக் குரும்பைகள் தோன்றும். பின்பு குரும்பையே இளநீர் ஆகிறது. இளநீர் முற்றித் தேங்காய் ஆகும்.

5. தென்னை ஐந்து வருஷங்களில் பலன் தரும். அது நமக்கு பலவிதங்களில் உபயோகப் படுகின்றது. அதன் மரத்தைக்கொண்டு நாம் வீடு கட்டலாம்; ஓலையைப் பின்னிப் பந்தல் போடலாம்;வெயிற்காலத்தில் இளநீரைச் சாப்பிடலாம். தேங்காய் பூஜைக்கு உதவும். முற்றின தேங்காயை வெயிலில் உலர்த்தி செக்கில் போட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம். தேங்காய் எண்ணெய் விளக்கு எரிக்க உதவும். அதில் பலகாரமும் செய்கிறார்கள். அதன் நாரினால் கயிறுகள் திரிக்கலாம். கொட்டங்கச்சியால் அகப்பை செய்யலாம், அடுப்பும் எரிக்கலாம்.



## 23. குரங்கும் குருவிகளும்

1. ஒரு மரத்தில் சில தூக்கணங் குருவிகள் அழகாய்க் கூடு கட்டிக்கொண்டு வசித்து வந்தன. ஒரு நாள் காற்று பலமாய் அடித்தது. மழையும் விடாமல் பெய்தது. அப்போது ஒரு குரங்கு மழையில் நனைந்து கொண்டு அங்கே வந்து மரத்தடியில் உட்கார்ந்தது.

2. மரத்தில் இருந்த ஒரு குருவி அந்தக் குரங்கைப் பார்த்து, "ஏ வானரமே, நீ உருவத்தில் மனிதனைப்போல் இருக்கிறாய். உனக்குக் கைகளும்

கால்களும் இருக்கின்றன. நீ கூடு கட்டிக்கொண்டிருந்தால் மழையில் நனையாமல் இருக்கலாமே! உனக்கு வேலை செய்யக் கைகள் இருந்தும் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? நாங்களோ உருவத்தில் மிகவும் சிறியவர்கள். எங்களுக்கு உன்னைப்போல் கைகள் இல்லை. ஆனாலும் நாங்கள் எங்கள் சிறிய மூக்கினால் கூடு கட்டிக் கொண்டு இருக்கிறோம். அதனால் எங்களுக்கு இப்போது ஒரு துன்பமும் இல்லை" என்று சொல்லிற்று.

3. இதைக் கேட்ட குரங்கு கோபங் கொண்டு, 'அடே ஊசி வாய் மூடா, நீயா எனக்குப் புத்தி சொல்லுகிறாய்! எனக்குக் கூடு கட்டத் தெரியாது. கட்டின கூட்டைப் பிரிக்கத் தெரியும்' என்று சொல்லிற்று. மேலும் அது மரத்தின் மேல் ஏறிக் கூடுகளை எல்லாம் பிரித்து எறிந்து முட்டைகளையும், குஞ்சுகளையும் நாசமாக்கிற்று.

4. பிள்ளைகளே, மூடக் குரங்குக்குத் தூக்கணங்குருவி புத்திசொல்லியதால், அது எவ்வளவு கஷ்டம் அடைந்தது பார்த்தீர்களா!

5. ஆகையால் நீங்கள் துஷ்டர்களுக்குப் புத்தி சொல்லாமல், அவர்களைக் கண்டால் தூர விலக வேண்டும்.

"துஷ்டருக்குப் புத்தி சொன்னால்
கஷ்டம் உண்டாகும்."



## 24. சந்திரன்

1. பகலில் வெளிச்சம் கொடுப்பது சூரியன் அல்லவா? அது போலவே இரவில் வெளிச்சம் கொடுப்பது சந்திரன்.

2. சந்திரனை நிலவு என்றும் அம்புலி என்றும் சொல்லுவார்கள். ஆகாயத்தைப் பார். அங்கே இப்பொழுது முழு நிலவு தோன்றுகிறது. அது செந்நிறமாகக் காணப்படுகிறது; வரவர பால்போல் வெண்ணிறமாக மாறும். ஆகாயத்தில் சந்திரனுடன் நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கின்றன.

3. இப்போது காண்பது போல் சந்திரன் எப்போதும் வட்டமாக இருப்பதில்லை. அது பதினைந்து நாட்கள் வரையில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்துகொண்டே வந்து நிலவே தெரிவதில்லை. அதற்கு அமாவாஸை என்று பெயர்.

4. அமாவாஸையிலிருந்து பதினைந்துநாள் வரையில் சந்திரன் வளர்ந்து கொண்டு வந்து, முழுநிலவும் தெரியும். அதற்குப் பௌர்ணமி என்று பெயர்.

5. சந்திரன் தேயும் காலத்திற்குத் தேய்பிறை அல்லது கிருஷ்ண பக்ஷம் என்றும், அது வளரும் காலத்திற்கு வளர்பிறை அல்லது சுக்கில பக்ஷம் என்றும் பெயர். இப்படி இரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாஸம்.

6. சந்திரனுடைய ஒளி குளிர்ச்சியாக இருக்கும். அதனால் குழந்தைகள் நிலவில் சந்தோஷமாய் விளையாடுகிறார்கள். சந்திரன் வளரும் அல்லது தேயும் பதினைந்து நாட்களும் திதிகள் எனப்படும்.

திதிகள் பதினைந்து:—

| | | |
|---|---|---|
| பிரதமை | சஷ்டி | ஏகாதசி |
| துவிதியை | சப்தமி | துவாதசி |
| திருதியை | அஷ்டமி | திரையோதசி |
| சதுர்த்தி | நவமி | சதுர்த்தசி |
| பஞ்சமி | தசமி | அமாவாஸை |
| | | அல்லது பௌர்ணமி |



## 25. பேராசை

1. ஒரு நாள் முத்துவும், மணியும் கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு, பக்கத்து ஊருக்குப் போனார்கள்; வழியில் ஒரு பிரபுவைக் கண்டார்கள். அவர் மிகவும் பசியால் களைத்து இருந்தார். அவர்கள் அவருக்குக் கொஞ்சம் உணவு கொடுத்தார்கள். அவர் மிகவும் சந்தோஷம் அடைந்தார். அதனால் அவர் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களும் அதைச் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள்.

2. முத்து, அந்தப் பணத்தைத்தானே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பேராசை கொண்டான். அதனால் அவன் மணியைப் பார்த்து, 'வழியில் திருடர் பயம் அதிகம். இந்தப் பணத்தை இங்கேயே மறைத்து விட்டுப் போவோம். வரும்போது எடுத்துக் கொள்ளலாம்'' என்றான்.

3. மணியும், முத்துவைப் போலவே பேராசை கொண்டான்; அவனுக்குத் தெரியாமல் தானே எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து ஒப்புக் கொண்டான். பிறகு இருவரும் பணத்தை ஒரு மரப் பொந்தில் வைத்து விட்டுப் போனார்கள்.

4. இதை எல்லாம் ஒரு பையன் மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் போன பிறகு, அவன் அங்கே போய் பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

5. மறு நாள் காலையில் முத்து ஒருவருக்கும் தெரியாமல் அங்கே போனான். மணியும் வேறு வழியாக அங்கே வந்து சேர்ந்தான். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டதும் வெட்கம் அடைந்தார்கள். இருவரும் பணத்தைத் தேடினார்கள். ஆனால் அவர்கள் அதைக் காண முடியவில்லை. அதிக ஆசைப்பட்டதால் உள்ளதும் போயிற்று என்று அவர்கள் எண்ணினார்கள்; அதிக மனவருத்தத்தோடு வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

149661



## 26. வாழை மரம்

1. இது ஒரு வினோதமான மரம். இதன் பெயர் வாழை. இதற்குக் கிளைகள் இல்லை; விதையும் இல்லை.

2. வாழைக் கன்றை கிழங்கோடு நட்டால், அது குருத்து விட்டு வளரும். மரத்தின் மேல் அடுக்கடுக்காய்ப் பட்டைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பட்டையின் உச்சியிலும் ஒரு பெரிய இலை

உண்டு. அந்த இலே நீளமாயும் அகலமாயும் இருக்கும். கிழித்தால் நேரே கிழியும்.

3. வாழை மரம் வைத்த பத்தாம் மாதம் குலை தள்ளும். குலை தள்ளிய வாழை பின் பலன் தராது. அதை உரித்தால் உள்ளே தண்டு இருக்கும். மரத்தைச் சுற்றிலும் பல கன்றுகள் இருப்பதைப் பார்.

4. மொந்தன் வாழை, பேயன் வாழை பச்சை வாழை, செவ்வாழை, ரஸ்தாளி வாழை எனப் பல விதமான வாழைகள் உண்டு.

5. ஆழமாகப் பள்ளம் தோண்டி, அதில் ஒரு வாழைக்கன்றை நட்டு, தினமும் தண்ணீர் ஊற்றி வந்தால், அது நன்ருய்ச் செழித்துவளரும். வாழை மரம் குலை தள்ளுவதற்கு முன் ஒரு சிறு இலை விடும். அதற்குக் கண்ணுடி இலை என்று பெயர். அதற்குப் பின்னே பூவும் காயும் தோன்றும். காய் பச்சை நிறமானது; பழுத்தால் மஞ்சள் நிறமாக மாறும். காய் தின்ருல் துவர்க்கும். ஆனல் பழம் தித்திக்கும்.

6. வாழை மரத்தைக் கலியாணப் பந்தலில் கட்டுவார்கள். அதன் பூவும், காயும், தண்டும் கறி சமைக்க உதவும். அதன் இலையில் சாப்பிடலாம்; நாரினல் புஷ்ப மாலை கட்டலாம். சிலர் அதனல் வஸ்திரம் நெய்கிருர்கள். அதன் கிழங்கு மருந்துக்கு உதவும்.



## 27. ஒற்றுமை

1. ஒரு ஊரில் வேடன் ஒருவன் இருந்தான். அவன் தினமும் காட்டுக்குப் போய் பறவைகளைப் பிடித்து, அவற்றை விற்று ஜீவித்து வந்தான்.

2. ஒரு நாள் அந்த வேடன் காட்டில் வலையை வீசினான்; பிறகு அதில் கொஞ்சம் தானியம் போட்டு விட்டு, கொஞ்ச தூரத்தில் ஒளிந்து கொண்டான்.

3. அப்போது சில புறாக்கள் கும்பலாக அங்கே பறந்து வந்தன. அவற்றின் அரசன் வலையைப் பார்த்தது. உடனே பக்ஷி ராஜன் திகில் அடைந்து, "ஓ புறாக்களே! இது ஏதோ மோச

மாக இருக்கிறது. இங்கே நாம் போகக்கூடாது'' என்று சொல்லிற்று.

4. அதைக் கேட்ட ஒரு புரு, "மோசம் ஒன்றும் இல்லை. நமக்கு வேண்டிய உணவு இருக்கிறது. நாம் நன்றாகத் தின்னலாம்'' என்றது. ஆதலால் எல்லாப் புருக்களும் அங்கே போய் உட்கார்ந்தன. உடனே அவைகள் வலையில் சிக்கிக் கொண்டன.

5. உடனே புருக்கள், தனித் தனியே ஓடப் பார்த்தன. ஆனால் அவைகள் தப்ப முடியவில்லை. அப்போது புரு அரசன், "நாம் எல்லோரும் ஒரே மனதாய்ப் பறந்தால் தப்பி விடலாம்.'' என்றது. அப்படியே அவைகள் எல்லாம் ஒரே மனதாய்ப் பறந்தன. வலையும் அவற்றின் காலோடு சேர்ந்து போயிற்று.

6. புருக்களின் செய்கையை வேடன் பார்த்தான். அவற்றின் ஒற்றுமையைக் கண்டு அவன் ஆச்சரியப் பட்டுக் கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

7. புருக்கள் வெகு தூரம் பறந்து ஒரு எலியின் துளைக்குப் போயின. அந்த எலி புரு அரசனுடைய தோழன். அவைகளைக் கண்ட உடனே எலி, வலையைத் துண்டு துண்டாகக் கடித்து எறிந்தது. புருக்கள் சந்தோஷமாய்ப் பறந்து போயின.

8. ஆதலால், ஒற்றுமையாய் இருந்தால் நாம் எந்தக் காரியத்தையும் முடித்துக் கொள்ளலாம் என்பது இக்கதையால் விளங்குகிறது.



# 28. கிராம அதிகாரி

1. கண்ணு, ஒரு வீட்டில் தாயார், தகப்பனுர், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை முதலியவர்கள் வசிக்கிருர்கள் அல்லவா! அவர்களுக்குத்தான் குடும்பம் என்று பெயர்.

2. குடும்பத்தில் உள்ளவர்களுக்கு, உணவும் உடையும், மற்ற சாமான்களும் வாங்கிக் கொடுப்பவர் யார்? அவரே தகப்பனுர். அவர் குடும்பத்தின் தலைவர் ஆவார். அவர் குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் சண்டை உண்டாகாமல் பார்த்துக்கொள்ளுகிருர்; வேண்டிய புத்திமதிகளைச் சொல்லுகிருர்.

3. இது போலவே அனேக குடும்பங்கள் சேர்ந்து வசிக்கும் இடத்திற்குக் கிராமம் என்று பெயர். கிராமத்தில் பல ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தலைவன் வேண்டும் அல்லவா? அவருக்குத்தான் கிராம முனிசீப் என்று பெயர். இவருக்கு மணியக்காரர் என்னும் பெயரும்உண்டு.

4. கிராம முனிசீப், கிராமத்தில் சண்டை சச்சரவு உண்டாகாமல் பார்த்துக் கொள்வார்; ஜனங்களின் நன்மைக்காக வேண்டிய காரியங்களைச் செய்வார்; சிறு வழக்குகளைத் தீர்த்து விடுவார்; கொலை, களவு நடந்தால் மேல் அதிகாரிக்குத் தெரிவிப்பார்; வரி வசூல் செய்வார்.

5. கிராம முனிசீப் கிராமத்தின் எல்லா வேலைகளையும் பார்க்க முடியாது. ஆதலால் அவருக்கு உதவியாக கணக்குப் பிள்ளை, தலையாரி, தோட்டி, வெட்டியான் என்ற வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்.



## 29. தந்திரமுள்ள காக்கை

1. ஒரு நாள் வெயில் கடுமையாகஇருந்தது. அப்போது ஒரு காக்கை தாகத்தால் கஷ்டப்பட்டு, அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. அதற்கு எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியாக அது ஒரு தோட்டத்திற்கு வந்து ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்தது.

2. கொஞ்ச நேரத்திற்குள், காக்கை அந்த மரத்தடியிலே ஒரு பானையைக் கண்டது. உடனே அது சந்தோஷம் கொண்டு அதன் மேல் உட்கார்ந்து தண்ணீரை எட்டிப் பார்த்தது. பானை

யில் கொஞ்சம் தண்ணீர்தான் இருந்தது. ஆதலால் அதற்குத் தண்ணீரைக்குடிக்க முடியவில்லை.

3. காக்கை பானையைக் கீழே உருட்ட முயன்றது. அதுவும் முடியவில்லை. அது சிறிது நேரம் யோஜனை செய்தது. பின்பு அதற்கு ஒரு தந்திரம் தோன்றியது.

4. பானையின் பக்கத்தில் சிறு கற்கள் கிடந்தன. அவற்றை காக்கை ஒவ்வொன்றாக எடுத்துப் பானைக்குள் போட்டது. தண்ணீர் கொஞ்சம்கொஞ்சமாக மேலே வந்தது. அதைப் பார்த்ததும், காக்கை சந்தோஷம் கொண்டு, தண்ணீர் மேலே வரும் வரையில் கற்களைப் போட்டுக் கொண்டே இருந்தது.

5. சிறிது நேரத்தில் தண்ணீர் மேலே வந்தது. உடனே காக்கை தன்னுடைய தாகத்தைத் தீர்த்துக் கொண்டு பறந்து போயிற்று.

6. இக்காக்கையைப் போல நாமும் விடாமல் முயற்சி செய்தால் எக்காரியத்தையும் செய்யக்கூடும்.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்."



## 30. சம்பாஷணை

ராஜம்:—பாலா, ஏது ஒருநாளும் இல்லாமல் இன்று தொப்பி வைத்துக் கொண்டிருக்கிறாய்?

பாலன்:—நேசா, என் தலையை மொட்டை அடித்துக்கொண்டேன். அதனால்தான் தொப்பி வைத்திருக்கிறேன்.

ராஜம்:—இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. ஏன் தலையை இப்படிச் செய்துகொண்டாய்?

பாலன்:—எனக்கு அடிக்கடி முறை ஜுரம் வந்தது அல்லவா? அதனால் என் தாயார் என்னை மொட்டை அடித்துக் கொள்ளச் சொன்னார்.

ராஜம்:—பாலா, நீ அப்படிச் செய்து கொண்டது சரிதான். அதுதான் நல்லது. இனிமேல் உனக்கு ஜுரம் வராது. நீ சுகமாய் இருப்பாய்.

பாலன்:—ராஜம், நீயும் என்ன அப்படியே சொல்லுகிறாய்? ஜுரத்திற்கும் தலைக்கும் என்ன சம்பந்தம்.

ராஜம்:—அப்படியா கேட்கிறாய். சம்பந்தம் உண்டு. தலையில் ஈர் உண்டாகிறதல்லவா?

பாலன்:—ஆமாம், அதனால் என்ன?

ராஜம்:—ஈரிலிருந்து பேன் உண்டாகிறது. பேன் தலையைக் கடித்து ரத்தத்தைக் குடிக்கிறது. அதனால் பேன் ஜுரம் உண்டாகிறது.

பாலன்:—அப்படியானால் நீ ஏன் உன் தலையை மொட்டை அடித்துக் கொள்ளவில்லை?

ராஜம்:—நான் என் தலையில் அழுக்கு அடையாமல் தினந்தோறும் எண்ணெய் தடவி, சீப்பினால் நன்றாக வாரிக் கட்டிக்கொள்ளுகிறேன். ஆதலால் என் தலையில் ஈரும், பேனும் உண்டாக மாட்டா.

பாலன்:—ராஜம், மெய்தான். நான் என் தலையை வாரிக் கொள்ளாமல், அஜாக்கிரதையாய் இருந்தேன். அதனால் கஷ்டம் அடைந்தேன். இனிமேல் நானும் உன்னைப்போல் நடந்துகொள்ளுகிறேன்.

ராஜம்:-பாலா, அப்படியே செய். நம்முடைய உபாத்தியாயரும், பேன் ஜுரம் கண்டவர்கள் தலையை மொட்டை அடித்துக் கொண்டு தகுந்த மருந்து சாப்பிட்டால் குணமாகும் என்று சொல்லி இருக்கிறார்.

பாலன்:—ராஜம், நான் இன்று ஒரு புதிய விஷயம் உன்னிடம் தெரிந்துகொண்டேன். நேரமாகிறது; வா, பள்ளிக்கூடம் போகலாம்.

# 13. நீதி மொழிகள்.

1. அதிகாலையில் எழு.
2. ஆலயம் தொழு.
3. இயன்றது கொடு.
4. ஈனரை விலக்கு.
5. உண்மையே பேசு.
6. ஊக்கம் தவிரேல்.
7. எண்ணித் துணி.
8. ஏளனம் தவிர்.
9. ஐயம் இடு.
10. ஒற்றுமை பயில்.
11. ஓரம் சொல்லேல்.
12. ஒளடதம் குறை.
13. அசுத்தம் ஒழி.
14. புத்திமான் பலவான்.
15. பெற்றோரை வணங்கு.
16. கர்வம் ஒழி.
17. கூலி குறையேல்.

81\. தர்மம் தலை காக்கும்.

# ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புற ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. சனி நீர் ஆடு.
14. ஞயம்பட உரை.
15. தந்தை தாய்ப் பேண்.
16. வஞ்சகம் பேசேல்.
17. இளமையிற் கல்.
18. உத்தமனாய் இரு.

# உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும்
மறக்கவேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்கவேண்டாம்.
5. போகாத இடந்தனிலே
போகவேண்டாம்.
6. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்லவேண்டாம்.
7. நல்லிணக்கம் இல்லாரோடு
இணங்கவேண்டாம்.
8. அஞ்சாமல் தனி வழியே
போகவேண்டாம்.
9. அடுத்தாரை ஒருநாளும்
கெடுக்கவேண்டாம்.
10. தனம் தேடி உண்ணாமல்
புதைக்கவேண்டாம்.
11. தருமத்தை ஒருநாளும்
மறக்கவேண்டாம்.
12. கொலைகளவு செய்வாரோடு
இணங்கவேண்டாம்.

14961



13. குற்றம் ஒன்றும் பாராட்டித்
திரியவேண்டாம்.

14. கற்றவரை ஒருநாளும்
பழிக்கவேண்டாம்.

15. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு
சொல்லவேண்டாம்.

16. வார்த்தை சொல்வார்
வாய்பார்த்துத் திரியவேண்டாம்.

17. மதியாதார் தலைவாசல்
மிதிக்கவேண்டாம்.

18. மூத்தோர் சொல் வார்த்தைதனை
மறக்கவேண்டாம்.

19. முன்கோபக் காரரோடு
இணங்கவேண்டாம்.

20. வாத்தியார் கூலியை
வைத்திருக்கவேண்டாம்.

21. கருதாமல் கருமங்கள்
முடிக்கவேண்டாம்.

22. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.

32. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்லவேண்டாம்.

24. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

## தமிழ் வருஷங்கள் 60

| | | |
|---|---|---|
| பிரபவ | ஸர்வஜித்து | பிலவங்க |
| விபவ | ஸர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | ஸௌம்ய |
| பிரமோதூத | விக்ருதி | ஸாதாரண |
| பிரஜோற்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரஸ | நந்தன | பரீதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| பஹுதான்ய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | ஸித்தார்த்தி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துன்மதி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருத்ரோத்காரி |
| தாரண | குரோதி | ரக்தாக்ஷி |
| பார்த்திப | விசுவாவஸு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

*Approved by the Text-Book Committee, Madras.

History and Geography Text-Books by
MR. G. V. RAMA AYYAR, B.A., L.T.,

| | | Rs. | As. |
|---|---|---|---|
| *1. | A History of England in Tamil (according to the new S.S.L.C. syllabus) | 1 | 4 |
| *2. | The Story of the Tanjore District for Class IV | 0 | 5 |
| *3. | Stories from Indian History for Class V | 0 | 5 |
| *4. | A History of India for Form I | 0 | 7 |
| *5. | Do for Form II | 0 | 10 |
| *6. | Do for Form III | 0 | 10 |
| *7. | for Higher Forms Part I | 0 | 12 |
| *8. | Do Do Part II | 1 | 2 |
| 9. | Notes on History of England (in English) up to 1603 A. D. | 0 | 6 |
| 10. | Geography of the Madras Presidency for Class V | 0 | 8 |
| 11. | Geography Text-books for I to III Forms (In active preparation) | | |
| | IN TELUGU. | | |
| *12. | Stories from Indian History | 0 | 5 |
| *13. | A History of India for Form I | 0 | 7 |
| 14. | A History of India for Forms II & III (in print) | | |
| *15. | Kannan Tamil Primer | 0 | 2½ |
| *16. | Kannan Second Reader | 0 | 3 |

*For Copies, apply to:—*

**G. V. K. SWAMY & Co.,**
**Educational Publishers,**
**Pillayar Koil Street, Kumbakonam.**